# அறிவித்தல் இல. R/2025/15

## வடக்கு மாகாண சபையின் விவசாயப் போதனாசிரியர் தரம் III மற்றும் பயிற்சி தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களின் CP/DEC/25ம் இலக்க 2025.07.16ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.07.07ம் திகதிய அமைச்சரவைக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரின் NP/31/01/Appoint.Gen இலக்க 2025.08.25ம் திகதிய கோரிக்கைக்கு அமைவாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாயப் போதனாசிரியர் தரம் III இல் காணப்படும் 27 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் 2025 நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **17.10.2025** ஆகும்.

| பதவிப் பெயர் | பதவி இல | வெற்றிடம் |
|---|---|---|
| விவசாயப் போதனாசிரியர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2025 | 01 | 27 |
| விவசாயப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2025 | 02 | |

### 01. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

01.1 வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2015.02.20 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு 01.01.20213 முதல் செயல் வலுப்பெறும் விவசாயப் போதனாசிரியர் சேவையின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும், அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் குறித்த பதவியின் **தரம் III அல்லது பயிற்சித் தரத்திற்கு** நியமிக்கப்படுவர்.

01.1 திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு விவசாயப் போதனாசிரியர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

01.2 இச் சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

01.3 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து **மூன்று** (03) வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

01.4 திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை 27 ஆகும். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 02. சம்பள அளவுத்திட்டம் :-

### *02.1* விவசாயப் போதனாசிரியர் தரம் III இற்குரியது :-

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 – 2025** க்கு ஏற்ப விவசாயப் போதனாசிரியர் சேவையின் தரம் - **III** இற்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டமானது ரூபா **52,250 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 – 100,040/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

### 02.2 விவசாயப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்குரியது :-

இப்பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016க்கு அமைவாக, அச் சுற்றறிக்கையின் **அட்டவணை - V** இன் அளவுத்திட்டத்திற்கு சமாந்தரமாக, தற்போது வலுவிலுள்ள 2025.03.25ம் திகதிய 10/2025ம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் **அட்டவணை - VI** இல் விதித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய பயிற்சித்தர கொடுப்பனவாக மாதாந்தப் படி ரூபா **41,317/-** வழங்கப்படும்.

1ம் ஆண்டு - ரூபா 41,317.00 ( மாதாந்த)
2ம் ஆண்டு - ரூபா 41,689.00 ( மாதாந்த)

## 03. பொதுவான தகைமைகள் :-

3.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**(*நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)**

3.3 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

3.4 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட சகல **தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

3.5 வடக்கு மாகாண விவசாய அமைச்சு செயலாளரின் NP//31/01/Appoint.Gen ம் இலக்க 2025.09.12ம் திகதிய சிபார்சின் அடிப்படையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் **2025.09.29**ம் திகதிய இலக்க **G/NPC/AS/Agri/Approval/2025**ம் அனுமதிக்கமைய, விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 **வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 04. கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் :-

**விண்ணப்பதாரி தாம் விண்ணப்பிக்கும் பதவிப் பெயருக்கு பொருத்தமானதாகக் குறிப்பிடப்பட்ட தகைமைகளை, பின்வரும் அடிப்படையில் கொண்டிருத்தல் வேண்டும்.**

### 4.1 விவசாயப் போதனாசிரியர் தரம் III இற்குரிய தகைமைகள் :-

#### 4.1.1 கல்வித் தகைமைகள்

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி அல்லது இலக்கியம் (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்துறையில் உயிரியல், இரசாயனவியல் **அத்துடன்** விவசாய விஞ்ஞானம் அல்லது பௌதிகவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒருபாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும்

**அல்லது**

க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் உயிர் முறைமைகள் தொழில்நுட்பத்துறையில் கீழ்க்குறிப்பிடப்படும் மூன்று (03) பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும்

- உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (Bio System Technology)
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (Science for Technology)
- விவசாய விஞ்ஞானம் (Agriculture Science)

**4.1.2 தொழிற் தகைமைகள்**

1. குண்டசாலை, அக்குனகொலபிலெஸ்ஸ, பெல்வெஹெர, பிபிலை, லபுதுவ, வாரியப்பொல, வவுனியா, அநுராதபுரம் மற்றும் கறபின்ச ஆகிய விவசாயக் கல்லூரிகளிலொன்றில் இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் விவசாயத்தில் தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

அக்குவைனாஸ் (Aquinas) கல்லூரியில் இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களின் கருத்துக்களை அறிந்துகொண்டதன்பின் தேவை ஏற்படின் மேற்படி தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானது என மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தொழில்நுட்பத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பின்வருவனவற்றில் பெற்றுக் கொண்ட இளமாணிப் பட்டம் ஏதாவது ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   i. விவசாய விஞ்ஞானப் பட்டம் [B.Sc (Agriculture)]
   ii. விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ விஞ்ஞான பட்டம் [B.Sc (Agriculture Technology and Management)]
   iii. ஏற்றுமதி விவசாய விஞ்ஞான பட்டம் [B.Sc (Export Agriculture)]

iv. பனை மற்றும் இறப்பர் தொழில்நுட்ப விஞ்ஞான பட்டம் [B.Sc (Palm and Latex Technology)

4.2 விவசாயப் போதனாசிரியர் பயிற்சி தரத்திற்குரிய தகைமைகள்

4.2.1 மேலே பந்தி 04.1.1 இல் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். (தொழிற் தகைமை பொருத்தமற்றது)

## 05. ஆட்சேர்ப்பு முறை :-

05.1 இவ்விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் முன்னறிவித்தல் எவையுமின்றி நிராகரிக்கப்படும்.

05.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் உயர் புள்ளி ஒழுங்கு வரிசையில் **(Merit Order)** நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். நியமனத்தின் பொருட்டான தகைமைகள், ஆவணங்கள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

05.3 விவசாய போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமைகளைக் கொண்ட பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் போதியளவு கிடைக்காத சந்தர்ப்பங்களில் மட்டும், விளம்பரத்தின் **பந்தி 4.2** இல் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்ட பரீட்சார்த்திகள் **விவசாயப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்கு** சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

05.4 அவ்வாறான சந்தர்ப்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறாக கோரப்படுகின்ற விவசாய போதனாசிரியர் பதவியணியில் காணப்படும் ஆகக்கூடிய **30%** ஆன வெற்றிடங்களே **பந்தி 4.2** இல் கூறப்பட்ட தகைமையுடைய தெரிவு செய்யப்படும் விவசாயப் போதனாசிரியர் பயிற்சித்தர பரீட்சார்த்திகள் மூலம் நிரப்பப்படும்.

05.5 விவசாய போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்கு நியமிக்கப்படுபவர்கள், தமது தொழில்சார் தகைமைகளை பூர்த்தி செய்யும் தேவைப்பாட்டுக்காக முழுநேரச் சம்பளத்துடன் இரண்டரை வருடங்களைக் கொண்ட விவசாய டிப்ளோமா பாடநெறியினை நிறைவு செய்ததன் பிற்பாடு அமுலில் உள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைவாக விவசாய போதனாசிரியர் தரம் III இற்கு உள்வாங்கப்படுவார்கள். எவ்வாறாயினும் குறித்த கற்கை நெறியினை பயிற்சி தரத்திற்கு நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து மூன்று வருட காலப் பகுதியினுள் நிறைவு செய்தல் வேண்டும்.

05.6 மேலே 05 இல் குறிப்பிட்ட வகையில் ஆட்சேர்ப்புக்கு தெரிவு செய்யப்படுபவர்களுள் விசேட தேவையுடையோருக்கான (மாற்றுத்திறனாளிகள்) ஒதுக்கீடு, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை **27/88** இற்கமைய கவனத்தில் கொள்ளப்படும். அவ்வாறு பரீட்சார்த்தியொருவர் நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது உடல், உள நிலைமைகள் தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

குறிப்பு :-

**விண்ணப்பதாரி மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வு நிலைமையின் கீழ் உரியவாறு விண்ணப்பிக்கின்றார் என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்பதுடன் அங்கவீனமற்ற ஆள் ஒருவர் அங்கவீனமுற்ற ஆளொருவராக அவராகவே கருதக் கூடாது.**

06. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா. 500/- ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

07. **விண்ணப்பிக்கும் முறை :-**

7.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்குமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

7.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/203"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்

7.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

7.4 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன்

விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

7.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: 021 221 9939 / தொலைநகல் இல: 021 221 9940 / மின்னஞ்சல்: **exampscnp@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

## *08.* ஆளடையாளத்தை நிரூபித்தல்

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## *09.* பொய்யான தகவல்களுக்கான தண்டனை

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருவாராயின், அவரது

பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென நியமனத்தின் பின் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 10. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியபிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா.854,880.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 11. பரீட்சைத் திட்டம் :-

இப் பரீட்சை கீழ்வருமாறு இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| *இல* | *வினாப் பத்திரம்* | *பாட விதானம்* | *நேரம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | உளச்சார்புப் பரீட்சை | இவ் வினாத்தாள் தர்க்கரீதியான சிந்தனைத் திறன், பகுப்பாய்வுத் திறன், முடிவெடுக்கும் இயலுமை, முடிவுக்குவரும் திறன். எண், மொழி மற்றும் உருவ அமைப்பு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புகள் மற்றும் பிரச்சனைகளை சமாளிக்க வேண்டிய விதம் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | தொழில்நுட்ப ஆய்வுப் பரீட்சை | இவ் வினாத்தாள் விவசாயம் தொடர்பான புத்தாக்கச் சிந்தனாசக்தி மற்றும் பிரச்சனைகளை தீர்க்கும் திறன் ஆகியவை தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவினை அளவிடுவதாக அமையும். (விவசாயம் தொடர்பானது) | 01 மணித்தியாலம் | 100 |

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நியமனத்திற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

## 12. பரீட்சைப் பெறுபேறுகள் :-

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழையும் www.np.gov.lk ⟶ **Exams & Recruitments** ⟶ **Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-**

(i) இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

ஆழ்வாப்பிள்ளை சிறி,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2025.09.30